## நடப்பு நிகழ்வுகள் மார்ச் 26-27

**1. உலக திரையரங்க நாள் (World Theatre Day) (WTD) என்று கொண்டாடப்பட்டது?**

A. மார்ச் 28

B. மார்ச் 25

C. மார்ச் 26

D. மார்ச் 27

**விடை: D [மார்ச் 27]**

விளக்கம்: ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27ஆம் தேதி உலக திரையரங்க நாளாக (World Theatre Day) (WTD) கொண்டாடப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் நாடக மேடையின் அருமையை உணர்த்துவதாகும். இந்நடைமுறையை, நடிப்புக் கலைக்கான உலகளாவிய மையமான சர்வதேச திரையரங்க மையத்தால் (International Theatre Institute) (ITI) 1961ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டது. இந்தநாளானது மேடை நாடகக் கலையின் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்தவர்களுக்கான கொண்டாட்ட நாளாக பார்க்கப்படுகிறது. அது மட்டுமன்றி மேடை நாடகக் கலையின் மதிப்பை உணராத அரசாங்கத்திற்கும், அரசியல்வாதிகளுக்கும், அமைப்புகளுக்கும், மக்களுக்கும் தனி நபர்களுக்கும் அதன் பயனையும், சக்தியையும் பொருளாதார வளர்ச்சிக்கான அதன் பங்கையும் அனைவரும் உணரவேண்டும் என்பதாகும்.

**2. வோர்லி கோலிவாடா முதல் இந்தியா நுழைவாயிலிற்கு கடல் மார்கமாக வழியினை கண்டுபிடித்த முதல் இந்தியப் பெண் யார்?**

A. ரேகா நிகம்

B. கௌரி சிங்

C. நிகிடா பரத்வாஜ்

D. தீபிகா குமாரி

**விடை: B [கௌரி சிங்]**

விளக்கம்: ராஜஸ்தானைச் சேர்ந்த கௌரி சிங் (14) என்ற பெண், வோர்லி கோலிவாடா முதல் இந்தியா நுழைவாயில் வரை கடல் மார்கமாக நீந்தி வழியினை கண்டறிந்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை பெருகிறார். இவர் சுமார் 36 கிமீ தொலைவுடைய தூரத்தை 6 மணி நேரம் 30 நிமிடங்களில் கடந்தார். கௌரி சிங் உதைப்பூரைச் சேர்ந்த 8 ஆம் வகுப்பு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**3. சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆசிய பசிபிக் வானுர்தி தொழில்நுட்ப மையத்தின் (Centre for Asia Pacific Aviation) (CAPA) உள்நாட்டு வான்வெளிப் பயணிகள் போக்குவரத்து அறிக்கையில் இந்தியாவின் மதிப்பு நிலை என்ன?**

A. 2வது

B. 3வது

C. 4வது

D. 5வது

**விடை: C [3வது]**

விளக்கம்: சமீபத்தில் சிட்னியைச் சேர்ந்த ஆசிய பசிபிக் வானுர்தி மையம் (Centre for Asia Pacific Aviation) (CAPA) வெளியிட்ட உள்நாட்டு பயணிகள் போக்குவரத்து தொடர்பான அறிக்கையில், இந்தியா உலக அளவில் 3வது மிகப்பெரிய சந்தை மதிப்பு நிலையை பெற்றுள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது அதாவது 2016ஆம் ஆண்டிற்கான இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு

வான்வெளிப் பயணிகள் போக்குவரத்தில் ஜப்பானை (97 மில்லியன்) மிஞ்சி 100 மில்லியனாக உள்ளது. இவ்வறிக்கையில் இந்தியா, அமெரிக்கா (719 மில்லியன்) மற்றும் சீனாவிற்கு (436 மில்லியன்) அடுத்த நிலையில் உள்ளது.

**4. 2017ஆம் ஆண்டிற்கான 71வது சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியில் வெற்றி பெற்ற அணி?**

A. மேற்கு வங்கம்

B. கோவா

C. குஜராத்

D. தமிழ்நாடு

**விடை: A. [மேற்கு வங்கம்]**

விளக்கம்: 2017ஆம் ஆண்டிற்கான 71வது சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டியில் கோவா அணியை வீழ்த்தி, 32வது முறையாக வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது மேற்கு வங்கம் அணி. இப்போட்டி கோவாவின், பம்போலிம் எனுமிடத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மேற்கு வங்க அணி 2011க்கு பிறகு ஆறு வருட காத்திருப்புக்கு (தோல்விக்கு) முடிவுக்கு கொண்டுவந்தது.

**5. இந்தியாவில் எந்த நகரத்தில் 105வது இந்திய அறிவியல் மாநாடு 'Indian Science Congress' (ISC - 2018) நடைபெறவுள்ளது?**

A. ஹைதராபாத்

B. புது தில்லி

C. சென்னை

D. புவனேஷ்வர்

**விடை: A. [ஹைதராபாத்]**

விளக்கம்: 105வது இந்திய அறிவியல் மாநாடு 'Indian Science Congress' (ISC - 2018) ஹைதராபாத் நகரத்தில் உள்ள ஒஸ்மானியா பல்கலைக்கழகத்தில் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3- 7 வரை நடைபெறவுள்ளது. இந்த அறிவியல் மாநாட்டின் கருப்பொருள் 'அறிவியல் மற்றும் தொழிநுட்பத்தை - அடையாதவர்களை அடையச் செய்வதாகும்'. இப்பல்கலைக்கழகம் இந்த மாநாட்டை நடத்துவது இது 6வது முறையாகும், அதேபோல் இந்தியா அறிவியல் மாநாடு நடைபெறுவது இது 7வது முறையாகும். இந்த மாநாட்டில் சராசரியாக 25 நோபள் பரிசு பெற்றவர்கள் பங்கேர்ப்பார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**6. இந்தியாவின் முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெண் எல்லை பாதுகாப்பு படை வீரர் யார் 'Border Security Force' (BSF)?**

A. அஞ்சலி குப்தா

B. தனுஷ்ஸ்ரீ பரீக்

C. பிரியா ஜெயக்குமார்

D. சந்தியா சௌகான்

**விடை: B தனுஷ்ஸ்ரீ பரீக்**

விளக்கம்: ராஜஸ்தானைச் சேர்ந்த தனுஷ்ஸ்ரீ பரீக் என்பவர் இந்தியாவின் மிகப்பெரிய எல்லை பாதுகாப்பு படையான, எல்லை பாதுகாப்பு படையின் 'Border Security Force' (BSF) தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் என்ற பெருமையை பெருகிறார். மத்திய பிரதேசம் மாநிலம், குவாலியர் மாவட்டத்தில் உள்ள டெகான்பூர் BSF பயிற்சி மையத்தில் பட்டமளிப்புக்கு பின் எல்லை பாதுகாப்பு படையில் தனது பணியை துவங்கினார். முதற்கட்டமாக BSF, அவரை மிகவும்

பதற்றமான இரண்டு எல்லைகளான இந்தியா – பாக்கிஸ்தான், இந்தியா – வங்கதேச எல்லைகளில் நக்சலைட் எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் பிற உள்நாட்டு பதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

**7. 2017 ஆம் ஆண்டுக்கான பார்முலா 1 ரோலக்ஸ் ஆஸ்திரேலியன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்?**

A. வல்தேரி பொட்டாஸ்

B. லீவிஸ் ஹாமில்டன்

C. செபாஸ்டியன் வெட்டல்

D. நிக்கோ ரொஸ்பெர்க்

**விடை: C. [செபாஸ்டியன் வெட்டல்]**

விளக்கம்: ஜெர்மனைச் சேர்ந்த ஓட்டப் பந்தய வீரரான, செபாஸ்டியன் வெட்டல் என்பவர் ஆஸ்திரேலியாவின், மெல்போர்ன் கிராண்ட் பிரிஸ் சர்க்கியூட்டில் நடைப்பெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான பார்முலா 1 ரோலக்ஸ் ஆஸ்திரேலியன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வெற்றி பெற்றார்.

**8. புர்வா பார்வே 'Purva Barve' எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A. மட்டைப்பந்தாட்டம் (கிரிக்கெட்)

B. குத்துச்சண்டை (பாக்சிங்)

C. பூப்பந்தாட்டம் (பாட்மிட்டன்)

D. சதுரங்கம் (செஸ்)

**விடை: C. [பூப்பந்தாட்டம் (பாட்மிட்டன்)]**

விளக்கம்: இந்தியாவைச் சேர்ந்த புர்வா பார்வே 'Purva Barve', 2017ஆம் ஆண்டுக்கான 19 வயத்துக்குட்பட்டவர்களுக்கான லீ நிங்க் - இஸ்ரேல் ஓபன் பெண்கள் ஒற்றையர் பிரிவு பாட்மிட்டன் போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த லீலா மினாடிசெ 'Lela Minadze' என்பவரை 21-6, 21-4, என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார். இப்போட்டி இஸ்ரேலின் ரிஷோன் லெசியோன் எனுமிடத்தில் உள்ள விளையாட்டரங்கத்தில் இப்போட்டி நடைபெற்றது. அதுமட்டுமன்றி இந்தியாவைச் சேர்ந்த வருன் கபூர் என்பவர் 15 வயத்துக்கு உட்பட்டவர்களுக்கான ஆண்கள் ஒற்றையர் பிரிவு பாட்மிட்டன் போட்டியில் இங்கிலாந்தைச் சேர்ந்த டோபி டில்லிங்காம் என்பவரை 21-10, 21-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

**9. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய விலங்குகள் நல வாரிய அமைப்பின் தலைவர் யார்?**

A. மோகன் சிங் அலுவாலியா

B. சுரேஷ் S.ஹோனப்போகோல்

C. சின்னி கிருஷ்ணா

D. சரத் சிங் நெகி

**விடை: D. [சரத் சிங் நெகி]**

விளக்கம்: இந்திய விலங்குகள் நல வாரிய அமைப்பானது (AWBI) சட்டப்பூர்வ அறிவுரை மையமாகும் இது மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ மாற்றங்களுக்கான அமைச்சகத்தின் (MoEF) கீழ் இயங்குகிறது. இதன் தலைமையகம் தமிழ்நாட்டில், சென்னையில் உள்ளது. AWBI நிரந்தர அமைப்பாக MoEF வின் மூத்த அதிகாரிகளால் மாற்றப்பட்டுள்ளதால் இதனை சமீபத்தில் செய்திகளில் காணலாம். எனவே சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ மாற்றங்களுக்கான அமைச்சகத்தின் (MoEF) செயல் இயக்குனர் மற்றும் சிறப்பு

செயலாளரான டாக்டர். சரத் சிங் நெகி என்பவர் புதிதாக உருவாக்கப்பட்ட 18 உறுப்பினர்களை உடைய இந்திய விலங்குகள் நல வாரிய அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் இவரது பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். இந்திய விலங்குகள் நல வாரிய அமைப்பானது தனது சட்ட அடிப்படையை, விலங்குகள் வன்கொடுமைச் தடைச் சட்டத்தின் – 1960 மூலம் பெருகிறது, இது எங்கும் விலங்குகளை மனிதாபிமானத்துடன் நடத்துவதற்கு சட்டங்களை வகுக்கிறது. அதுமட்டுமன்றி இவ்வமைப்பானது விலங்கு வதையை தடுக்க அவ்வப்போது சட்டங்கள் இயற்றுகின்றன.

**10. கின்னர்சனி வனவிலங்குகள் சரணாலயம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**

A. ஆந்திர பிரதேசம்

B. கேரளம்

C. தெலுங்கானா

D. தமிழ்நாடு

**விடை: C. [தெலுங்கானா]**

விளக்கம்: கின்னர்சனி வனவிலங்குகள் சரணாலயம் தெலுங்கானா மாநிலத்தின் கம்மம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த வனவிலங்குகள் சரணாலயம் சுமார் 635.40 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவி எழிலோவியமாக கின்னர்சனி ஆறும் சரணாலயத்தின் மையத்தில் அடர்ந்த காடுகளாள் சூழப்பட்ட தீவுகளும் அமைந்துள்ளது. இந்த சரணாலயம் கின்னர்சனி ஆற்றாலயே இப்பெயர் பெற்றது. இந்த ஆறு சரணாலயத்தை இரண்டாக பிரித்து கோதாவரி ஆற்றை அடைகிறது. இந்த சரணாலயத்தில் பேந்தர் சிறுத்தைகள், சிங்கரா, சௌசிங்காஸ், கடைமான், சீத்தால், கவுர்ஸ், கழுதைப்புலி, நரி, காட்டு பன்றி, புலிகள், தேனுண்ணுங் கரடிகள், கரு மான் போன்றவை காணப்படுகிறது. அதிக அளவிலான காட்டுக் கோழிகள், கவுதாரிகள், பாட்ரிட்ஜஸ்கள், மயிற் கவுதாரிகள், நுக்தாஸ்கள், ஸ்பூன்பில்ஸ்

பறவைகள், நன்னீர் வாத்துகள், புறாக்கள் ஆகிய பறவைகள் சுற்றுலா பயணிகளால் பார்த்து ரசிக்கப்படுகின்றன.